செய்தி வெளியீடு எண்.119 நாள்.25.12.2020

**பத்திரிக்கைச் செய்தி**

**2021ஆம் ஆண்டிற்கான 24வது தேசிய இளைஞர் விழா – மாவட்ட அளவிலான போட்டிகள் நடத்துதல் - சென்னை மாவட்டத்தை சார்ந்த 15 வயது முதல் 29 வயதிற்குட்பட்ட இசைக் கலைஞர்கள் ஆடவர் மற்றும் மகளிர் கலந்து கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் சென்னை அவர்கள் அழைப்பு**

இந்திய அரசு இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம் ஆண்டுதோறும் இளைஞர்களின் தனித்திறனை மேம்படுத்துவதற்காக சுவாமி விவேகானந்தர் அவர்களின் பிறந்த நாளை இளைஞர் தேசிய விழாவாக கொண்டாடி வருகின்றனர். இவ்வாண்டு கோவிட்-19 தொற்று காரணமாக இவ்விழாவினை மெய்நிகர் முறையில் (Virtual / Hybrid Mode) நடத்துவது என்று இந்திய அரசு முடிவு செய்துள்ளது. அதன் பொருட்டு, இந்திய அரசு வழிகாட்டுதலின்படி தமிழக அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, கோவிட்-19 சுகாதார விதி முறைகளுக்குட்பட்டு மாவட்ட அளவிலான போட்டிகளை எதிர்வரும் 29.12.2020 மற்றும் 30.12.2020 ஆகிய தேதிகளிலும், மாநில அளவிலான போட்டிகளை 05.01.2021 முதல் 08.01.2021 வரையும் மற்றும் தேசிய அளவிலான போட்டிகளை 12.01.2021 முதல் 19.01.2021 வரையும் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் மாவட்ட அளவிலான போட்டிகள் மெய்நிகர் நடைமுறை (Virtual / Hybrid Mode) மூலமாக 29.12.2020 மற்றும் 30.12.2020 ஆகிய தேதிகளில் நடைபெறும். 15 வயது முதல் (31.12.2020 அன்றைய தேதியில்) 29 வயதுக்குட்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் மற்றும் மாணவர் அல்லாதவர்கள் அனைவரும் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். போட்டியாளர்கள் தங்களுக்கு தேவையான அனைத்து உபகரணங்களையும் தாங்களே தயார் செய்து கொள்ள வேண்டும். போட்டியாளர்கள் தங்களுடைய போட்டிக்கான பதிவினை (Video Recording) நல்ல தெளிவான ஒளி/ஒலி அமைப்போடு பதிவு செய்ய வேண்டும். மாவட்ட அளவிலான போட்டிகளில் முதலிடம் பெறும் போட்டியாளர்கள் மாநில அளவிலான போட்டியிலும், மாநில அளவிலான போட்டியில் வெற்றி பெறும் போட்டியாளர்கள் தேசிய அளவிலான போட்டியிலும் கலந்து கொள்ளலாம்.

போட்டி வகைகள் : **1.இசை (Music)** பாரம்பரிய இசை கருவிகள் - தனிநபர் - 5 நிமிடம், பாரம்பரிய இசை வாய்ப்பாட்டு – தனிநபர் - 5 நிமிடம், நாட்டுப்புறபாடல்கள் - குழு (4முதல் 8 நபர் வரை) – 8 நிமிடம், இந்திய இசை – குழு (4முதல் 8 நபர் வரை) - 8 நிமிடம், **2.நடனம் (Dance)**: பரதநாட்டியம் -தனிநபர் - 10 நிமிடம், நாட்டுப்புற நடனங்கள் - குழு (4முதல் 8 நபர் வரை)- 8 நிமிடம், நவீன நடனங்கள் - குழு (1நபர்) – 8 நிமிடம், நவீன நடனங்கள் - தனிநபர் - 10 நிமிடம், **3.உடை அலங்காரம் (Regional Attire Show)**: பாரம்பரிய உடை அலங்காரம் - குழு (2(1ஆண் + 1பெண்)) – 15 நிமிடம், நவீன உடை அலங்காரம் - குழு (2(1ஆண் + 1பெண்)) – 15 நிமிடம், **4.நாடகம் (Theatre)** : வீதி நாடகம் - கருப் பொருள் - சமூக செய்தி (4முதல் 8 நபர் வரை) – 4 நிமிடம், **5. காட்சிக் கலைகள் (Visual Arts)** : ஓவியம் - நீர் - தனிநபர் - 8 நிமிடம், பென்சில் வரைபடம் - தனிநபர் - 8 நிமிடம், சிற்பம் தயாரித்தல் மண் - தனிநபர் - 8 நிமிடம், புகைப்படம் எடுத்தல் - சுற்றுச் சூழல் - தனிநபர் - 8 நிமிடம், **6. எழுத்தாற்றல் (Expression Art)** : கட்டுரை – ஆங்கிலம் தலைப்பு – புதிய இந்தியாவின் உற்சாகம் - தனிநபர் - 5 நிமிடம், கவிதை எழுதுதல் - ஆங்கிலம் - தனிநபர் - 5 நிமிடம், **7. பாரம்பரிய விளையாட்டு (Indigenous Games)** : யோகா – தனிநபர் - 5 நிமிடம் ஆகிய போட்டிகள் மேற்குறிப்பிட்டுள்ள நிமிடங்களின்படி (Video Recording) நல்ல தெளிவான ஒளி/ஒலி அமைப்போடு பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யப்பட்ட வீடியோ பதிவினை உறுதி மொழி படிவத்தோடு இணைத்து 29.12.2020 மற்றும் 30.12.2020 அன்று மாலை 5.00 மணிக்குள் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலக மின்னஞ்சல் முகவரியான dsochn@gmail.com என்ற முகவரியில் சமர்ப்பிக்க வேண்டும். 30.12.2020 அன்று மாலை 5.00 மணிக்கு பிறகு பெறப்படும் மின்னஞ்சல் பதிவுகள் நிராகரிக்கப்படும். மேலும் விவரங்களுக்கு் மாவட்ட விளையாட்டு அலுவலக தொலைபேசி எண்.044-26644794, அலைபேசி 7401703480 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.**

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை-01